www.tamilarangam.net

# பெண்ணுரிமைகள் கண்ணோட்டம்

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
## மட்டக்களப்பு.

மடல் – 05 ♀♀♀ தை–ஆனி 2004

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் சமூகத்தில் பெண்களது உரிமைகள் மீறப்படுவதை எடுத்துக்காட்டி அதன் மூலம் அவர்களது உரிமைகள், பாதுகாப்பை வற்புறுத்தவும் சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இல்லாத சமூகத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக்கொண்டு பெண்ணுரிமைகள் கண்ணோட்டம் என்னும் ஐந்தாவது மடலை வெளியிடுகின்றது. இவ்வன்முறைச் சம்பவ தகவல்கள் 2004 ஜனவரி – யூன் வரையிலான காலப்பகுதியில் சூரியா நிலையத்தினால் சேகரிக்கப்பட்டவையாகும். எனினும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சகல பகுதிகளையும் இத்தகவல் சேகரிப்பு உள்ளடக்கப்படவில்லை. இத்தகவல் சேகரிப்புக்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு கிடைக்கும் பட்சத்தில் மேலும் விஸ்தரிக்கப்படும் என நாம் விரும்புகிறோம்.**

– தயாரிப்பு –
விஜயகுமாரி முருகையா

## பொருளடக்கம்


- பெண்கள் மீதான வீட்டு வன்முறைகள் / தாக்குதல்கள்
- பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு/ கொலை முயற்சி/ கொலை
- பெண்கள் தொடர்பான விசேட சட்டங்கள் 95ம் ஆண்டு திருத்தசட்டங்கள்
- விவாகரத்து வழக்குகள் தொடர்பான நீதிமன்றக் கட்டளைகள்
- தாபரிப்பு வழக்குகள் தொடர்பான நீதிமன்றக் கட்டளைகள்.
- கொலை வழக்குகள் தொடர்பாக தற்போது உள்ள நிலை
- சிறுமிகள் மீதான பாலியல் துஸ்பிரயோகம் 2004
- சம்பவக் கற்கை
- பெண்கள் சிறுவர்களின் உரிமைகளுக்காக வேலை செய்யும் மட்டக்களப்பு நிறுவனங்கள்.
- பெண்கள் அமைப்புக்களால் வெளிவந்த செய்தி மடல்கள் சஞ்சிகைகள் சூரியா நூலகத்தில் உள்ளவை சில ...
- பாலியல் குற்றச் செயல்கள் தொடர்பான நடைமுறை சாட்சிய சட்ட மருத்துவ விடய நிகழ்ச்சி.
- பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான செயல்வாதம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள் மீதான வன்முறைகள் / தாக்குதல்கள் 2004

| தகவல் | சம்பவம் நடைபெற்ற முறைப்பாட்டுத் திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| மட்/ வைத்திய -சாலை மூலம் | 20.01.04 | 34 | ஏறாவூர் | கணவர் | வீட்டில் | கணவன் மனைவியை தொடர்ச்சியாக அடித்து துன்புறுத்தியுள்ளார். இச்சம்பவங்களை நேரில் சந்தித்த இவர்களது 7 வயது மகன் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார். | மனநிலை பாதிக்கப்பட்ட 7 வயது சிறுவன் மட்டு வைத்தியசாலையில் மனநோய் பிரிவில் சிகிச்சைகள் பெற்று வருகின்றார். |
| சூரியா | 27.01.04 | 34 | பெரிய கல்லாறு | கணவர் | வீட்டில் | திருமணம் முடித்ததில் இருந்து (6வருடம்) கணவன் தொடர்ச்சியாக மனைவியை சித்திரவதைப் படுத்தியுள்ளார். | இப்பெண் வீட்டை விட்டு வெளியேறி தனது தந்தையுடன் வாழ்கின்றார். மனித உரிமை இல்லத்திற்கு அனுப்பப்பட்டது. வழக்கு இடம் பெறுகிறது. |
| சூரியா | 28.01.04 | 44 | இருதய புரம் மேற்கு | கணவர் | வீட்டில் | கடந்த 8 வருடங்களாக மனைவியை அடித்து சித்திரவதைப்படுத்தி பாரதூரமாக துன்புறுத்தியுள்ளார். | இருவரையும் அழைத்து விசாரணை மேற்கொண்டு மேலும் துன்புறுத்தக் கூடாது எனவும் ஆலோசனை வழங்கப்பட்டது. இருவரும் சேர்ந்து வாழ்கின்றனர். |
| மனித உரிமைகள் இல்லம் மூலம் | 26.02.2004 | 35 | காரை - தீவு | இனந் தெரியாத நான்கு நபர்கள் | பெண் -ணின் வீட்டில் | இனந்தெரியாத நான்கு நபர்களால் பெண் அவரது வீட்டில் வைத்து பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டார். | சம்மந்தப்பட்ட பெண் அச்சுறுத்தல்காரணமாக எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் ஊரைவிட்டு வெளியேறி மத்திய கிழக்கு நாட்டிற்கு சென்றுள்ளார். |
| சூரியா | 1.03.04 | 34 | புன்னைச் சோலை | கணவன் | வீட்டில் | கணவன் வேறு பெண்ணுடன் உறவு காரணமாக மனைவியை அடித்து துன்புறுத்தியுள்ளார் | மட்/ பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இருவரும் பிரிந்து வாழ்கின்றனர். குழந்தை தாயுடன் உள்ளது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குழந்தையை தந்தைக்கு காட்டுமாறு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர். |

www.tamilarangam.net

# பெண்கள் மீதான வீட்டு வன்முறைகள் / தாக்குதல்கள் 2004

| தகவல் | சம்பவம் நடைபெற்ற/ முறைப்பாடு திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| காத்தான் குடி பொலிஸ் மூலம் | 23.03.04 | 28 | ஆரை -யம்பதி | கணவன் | வீட்டில் | கணவன் தினமும் சந்தேகம் காரணமாக மனைவியை தகாத வார்த்தைகளால் ஏசியதுடன் அடித்து துன்புறுத்தியுள்ளார். | காத்தான்குடி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுபல தடவை விசாரணை இடம்பெற்றது. எனினும் இந்நபரில்மாற்றம் ஏற்படவில்லை. சூரியா மூலம் கதைக்க முயற்சித்த போதும் நபர் தலைமறைவாகியுள்ளார். |
| சூரியா | 20.04.04 | 28 | கல்லடி வேலூர் | கணவன் | வீட்டில் | திருமணம் முடித்த காலம் தொடக்கம் மனைவியை அடித்து துன்புறுத்தி பலவந்தமாக மனைவியுடன் பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளார். சீதனமாக கொடுத்த 1,35000 பணத்துடன் தற்போது வீட்டை விட்டு வெளியேறி யுள்ளதுடன் சீதனக் காணியை விற்றுத் தரும்படி மனைவியை வற்புறுத்துகின்றார். | மட்டக்களப்பு பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை இடம்பெற்றது. சம்பந்தப்பட்ட பெண் வழக்கு தொடர விரும்பவில்லை. |
| சூரியா | 23.04.04 | 39 | களுதா -வளை | கணவன் | வீட்டில் | கணவன் மனைவியை அடித்து காயப்படுத்தியதுடன் கிராம சேவகர் மூலம் மனைவியின் தாலிக்கொடியையும் பெற்றுக் கொண்டு 4 பிள்ளைகளையும் கவனிக்காது வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். | இது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளபோதும் எதிராளி நீதிமன்றத்துக்கு சமூகம் கொடுக்காமல் உள்ளார். பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. |
| காத்தான் குடி பொலிஸ் | 23.04.04 | 33 | கிரான் குளம் | | வீட்டில் | கணவன் திருமணம் முடித்த காலத்திலிருந்து மனைவியின் மேல் சந்தேகம் காரணமாக அடித்து துன்புறுத்தியுள்ளார். | காத்தான்குடி பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டது. பொலிசார் இவர்களை உறவாக்கி வைத்த பின்னும் மீண்டும் கணவன் மனைவியை சித்திரவதைப்படுத்து -கின்றார். வழக்கு தொடர மனைவி தீர்மானித்துள்ளார். |

www.tamilarangam.net

# பெண்கள் மீதான வீட்டு வன்முறைகள் / தாக்குதல்கள் 2004

| தகவல் | சம்பவம் நடைபெற்ற முறைப்பாடு திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| காத்தான் குடி பொலிஸ் மூலம் | 26.04.04 | 27 | ஆரை -யம்பதி | கணவன் | வீட்டில் | கணவன் தினமும் துன்புறுத்துவதுடன் மனைவியிடமிருந்து 50,000/= காசும் 15 பவுண் நகையையும் கொண்டு சென்றுள்ளார். எந்தவித தொடர்பும் இல்லை. | காத்தான்குடி பொலிசில் முறைப்பாடு செய்ததுடன் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. |
| சூரியா | 28.04.04 | 34 | கல்லடி | கணவன் | வீட்டில் | கணவன் மதுபாவித்துவிட்டு மனைவியை தினமும் அடித்து துன்புறுத்தியதனால் மனைவி வீட்டைவிட்டு வெளியேறி தனது தாய் வீட்டில் வாழ்கின்றார். | மட்டக்களப்பு பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 3 தடவை விசாரணைக்கு அழைக்கப்பட்டும் எதிராளி சமூகம் கொடுக்கவில்லை. |
| சூரியா | 31.04.04 | 22 | சித்தா ண்டி | கணவன் | வீட்டில் | கணவன் சந்தேகம் காரணமாக மனைவியை வயரினால் அடித்துதுன்புத்தியுள்ளார். கணவன் வேறு பெண்ணை திருமணம் முடித்துள்ளார். | மனித உரிமை நிறுவனம் மூலம் வழக்கு பதிவு செய்யப்பட்டது. |
| சூரியா | 06.05.04 | 44 | களுதா -வளை | கணவன் | வீட்டில் | மனைவி, கணவனால் தினமும் துன்புறுத்தப்பட்டார். | களுவாஞ்சிக்குடி பொலிசில்முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை இடம்பெற்றது. சம்பந்தப்பட்ட நபர் வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். |
| சூரியா | 07.05.04 | 29 | மாமாங் -கம் | கணவன் | வீட்டில் | கணவன் மனைவியின் மேல் சந்தேகம் காரணமாக மனைவியையும் பிள்ளைகளையும் அடித்து துன்புறுத்தியதுடன் வீட்டு தளபாடங்களையும் உடைத்துள்ளார். | மட்டக்களப்பு பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை இடம்பெற்று வருகின்றது. |
| சூரியா | 17.05.04 | 24 | சின்ன ஊறணி | கணவன் | வீட்டில் | கணவன் மனைவியையும் பிள்ளைகளையும் அடித்து துன்புறுத்தியதுடன் வேறு திருமணம் முடித்துள்ளார். | பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நபர் சமூகம் கொடுக்கவில்லை. |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள் மீதான வீட்டு வன்முறைகள் / தாக்குதல்கள் 2004

| தகவல் | சம்பவம் நடைபெற்ற /முறைப்பாட்டுத் திகதி | வயது | வதிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 19.05.04 | 28 | பெரிய ஊறணி | கணவன் | வீட்டில் | திருமணம் முடித்து 7 மாதம் கற்பிணியாக இருக்கும் மனைவியை கொடுமைப்படுத்தியுள்ளார். தற்போது இருவரும் பிரிந்து வாழ்கின்றனர். | பொலிசில்முறைப்பாடு செய்ததுடன் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. |
| சூரியா | 03.06.04 | 34 | கொம்மா -துறை | கணவன் | வீட்டில் | கணவனால் பலதடவைகள் சித்திரவதைக்குள்ளாக்கப்படடுள்ளார். பெண்ணின் சீதனமான 4 மாடு, வீடு, வளவு என்பவற்றை கணவன் அபகரித்து மனைவியையும் பிள்ளைகளையும் வீட்டைவிட்டும் வெளியேற்றியுள்ளார். | 7 வருடமாக தாயின் பராமரிப்பில் மனைவியும் பிள்ளைகளும் உள்ளனர். ஏறாவூர் பொலிசில் முறைப்பாடு செய்யுமாறு கூறப்பட்டது. தாபரிப்பு வழக்கு இடம் பெறுகிறது. |
| சூரியா | 03.06.04 | 25 | களுவாஞ் -சிக்குடி | கணவர் | வீட்டில் | மனைவின் சீதனமான 2 லட்சம் ரூபா பணத்துடனும் நகையுடனும் கணவன் வெளிநாடு சென்றுள்ளார். பிள்ளைக்கும், மனைவிக்கும் எந்தவித உதவியும் இல்லை. தற்போது கணவன் வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளார்.. | மனைவிக்கு சீதணமாகக் கொடுத்த 2 லட்சம் ரூபா பணமும் நகையுடனும் கணவர் வெளிநாடு சென்றுள்ளார். |
| சூரியா | 13.06.04 | 38 | குருக்கள் மடம் | கணவர் (ஆசிரியர்) | வீட்டில் | திருமணமாகி 8 வருட காலமாக ஆசிரியரான கணவன் ஆசிரியையான மனைவியை தினமும் சந்தேகம் காரணமாக சித்திரவதைப்படுதியுள்ளார். [அடி, உதை, துன்புறுத்தல்] | ஒரு வருட காலமாக பிரிந்து வாழ்கின்றனர். |
| சூரியா | 21.06.04 | 26 | புதுக்குடி யிருப்பு | கணவர் | வீட்டில் | கணவன், மனைவிமயயும், 4 பிள்ளைகளையும், மனைவியின் சகோதரங்களையும் அடித்து துன்புறுத்துகின்றார். | மனித உரிமை நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது. |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு, கொலை முயற்சி / கொலை 2004

| தகவல் | சம்பவம் நடைபெற்ற முறைப்பாடு திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 06.02.2004 | 26 | ஆலங் -குளம் | இனந் தெரியாத ஐந்து நபர்கள். | ஓட்டமா -வடி சனநட மாட்டம் இல்லாத பாழடை ந்த கட்டிடத் துக்குள் | ஆலங்குளத்தை சேர்ந்த பெண் ஆட்டோவில் செல்லும்போது இனந்தெரியாத ஐந்து நபர்கள், இப் பெண்ணை வழிமறித்து கடத்திச் சென்று பாழடைந்த வீடு ஒன்றில் வைத்து இரண்டு நாட்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி சித்திரவதைப்படுத்தி உள்ளனர். பின்னர் பெண் வீடு வந்து சேர்ந்தார். | வாழைச்சேனை பொலிசில் முறைப்பாடு செய்ததுடன்; மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். சம்பந்ப்பட்ட பெண் மத்திய கிழக்கு நாடு ஒன்றுக்கு சென்றுள்ளார். |
| மட்/ வைத்திய சாலை | 17.03.04 | 33 | புதுக்குடி -யிருப்பு | கணவன் | வீட்டில் | கணவன் மனைவியை அடித்து துன்புறுத்தி கத்தியால் கன்னத்திலும் கண்ணிலும் குத்தியுள்ளார். மனைவி காயங்களுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். | குற்றம் சாட்டப்பட்ட கணவன் காத்தான் குடி பொலிசாரால் தேடப்படுகின்றார். (இந்நபர் போதை வஸ்த்துக்கள் கஞ்சா, மதுபாவிப்பது, வழக்கம்) |
| களுவாஞ் -சிக்குடி பொலிஸ் மூலம் | 07.04.2004 | 30 | பெரிய கல்லாறு | காதலன் | பெண் -ணின் வீட்டில் | காதலியை 7 மாத கர்ப்பிணியாக்கிய காதலன், அவரை கத்தியால் குத்தி கொலை செய்ய முயற்சித்துள்ளார். | குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட பெண் கூறுகின்றார். |
| காத்தான் குடி பொலிஸ் | 22.04.04 | 43 | கல்லடி | கணவன் | வீட்டில் | 23 வருடகாலமாக கணவன் மது பாவித்து விட்டு சந்தேகம்காரணமாக அடித்து துன்புறுத்தி சித்திரவதைப்படுத்தி விளக்கால் எறிந்து மனைவியை எரியூட்டியுள்ளார். மனைவி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். தற்போது குற்றம் சாட்டப்பட்டவர் மகளையும் துன்புறுத்தியிருக்கிறார். | பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது. மனித உரிமைகள் இல்லத்துக்கு அனுப்பப்பட்டது. |
| சூரியா | 24.04.04 | | கூழாவடி | கணவன் | வீட்டில் | கணவன் மனைவியை கையில் கிடைக்கும் ஆயுதங்களால் மிக மோசமான முறையில் தாக்கியுள்ளார். அதனால் மனைவியின் உடல் உறுப்புக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது மனைவியையும் பிள்ளைகளையும் வீட்டை விட்டு வெளியேற்றியுள்ளார். | மட்டக்களப்பு பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது. எனினும் எதுவித நடவடிக்கையும் செய்து கொடுக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட பெண்ணும் குழந்தைகளும் மறைந்து வாழ்கின்றனர். |

www.tamilarangam.net

## பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு / கொலை முயற்சி / கொலை – 2004

| தகவல் | சம்பவம் நடைபெற்ற முறைப்பாடு திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 31.04.04 | 57 | தாளங் -குடா | கணவன் | வீட்டில் | மனைவியையும் பிள்ளையையும் அடித்து துன்புறுத்தியதுடன் மனைவியின் காலில் கத்தியால் வெட்டியுள்ளார். | காத்தான்குடி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை இடம் பெற்று வருகின்றது. |
| சூரியா | 13.05.04 | 22 | வாழைச் -சேனை | கணவன் | கணவன் வீட்டில் (நாவற் -குடா) | கணவன் திருமணம் முடித்த காலம் தொடக்கம் மனைவியை அடித்து துன்புறுத்தியுள்ளார். இரு தடவை மனைவியின் சம்மதமின்றி கருக்கலைப்பு நடைபெற்றுள்ளது. தற்போது பெண்ணை வீட்டை விட்டு வெளியேற்றியும் உள்ளார். | மட்டக்களப்பு பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை இடம்பெற்றது. தற்போது பொலிசாரால் மனைவி கணவனுடன் சேர்த்து வைக்கப்பட்டுள்ளார். |
| சூரியா | 14.05.04 | 23 | வாழைச் -சேனை | கணவன் | வீட்டில் | திருமணம் முடித்து 8 மாதக் கற்பிணியாக இருக்கும் இப்பெண்ணை கணவன் பல தடவை அடித்து துன்புறுத்தி அயன், கீற்றர் சூடு வைத்து பலத்த காயங்களுக்குள்ளாக்கினார். | கல்குடா பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை இடம்பெற்றது. சம்பந்தப்பட்ட நபர் வேறு பெண்ணுடன் உறவு வைத்துக் கொண்டார். |
| காத்தான் குடி பொலிஸ் | 24.05.04 | 28 | கல்லடி | கணவன் | வீட்டில் | கணவன் தினமும் மனைவியை துன்புறுத்தி காலால் அடித்தும் உதைத்தும் தலையில் அடித்தும் சித்திரவதைக்குள்ளாக்கியுள்ளார். | காத்தான்குடி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன் சம்பந்தப்பட்டபெண் தாய் வீட்டில் வசிக்கின்றார். |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு / கொலை முயற்சி / கொலை – 2004

| தகவல் | சம்பவம் நடைபெற்ற முறைப்பாடு திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| காத்தான் குடி பொலிஸ் மூலம் | 17.06.04 | 37 | கல்லடி வேலூர் | கணவன் | வீட்டில் | கணவன் சந்தேகம் காரணமாக 16 வருடங்களாக மனைவியை அடித்து துன்புறுத்தி மனைவியின் கையை முறித்துள்ளார். மகளையும் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கியுள்ளார். | காத்தான்குடி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட பெண்ணும் பிள்ளைகளும் தனது சகோதரி வீட்டில் வாழ்கின்றனர். இலவச சட்டமன்றத்தின் மூலம் வழக்கு பதியப்பட்டுள்ளது. |
| சூரியா | 23.06.04 | 36 | வாழைச் சேனை | கணவன் | வீட்டில் | கணவன் மனைவியை அடித்தும் கழுத்தை நெரித்தும் மிகவும் பாரதூரமாக கொடுமைப்படுத்தியுள்ளார். சீதனமாக எழுதிய 5 ஏக்கர் வயல் காணியுட்பட, வீடு, வளவு, 10 பவுண் நகை, வீட்டுத் தளபாடங்கள் ஆகியவற்றை மனைவியிடமிருந்து அபகரித்துள்ளார். | தற்போது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. 2200/= தாபரிப்பு தீர்ந்துள்ளது. |
| சூரியா | 14.05.2004 | 22 | ஏறாவூர் | றியாஸ் என் பவரும் இன்னு னும் இரு இளைஞ -ர்களும் | பெண் ணின் வீட்டில் | 22 வயதுடைய பெண்ணை சம்மந்தப்பட்ட றியாஸ் என்பவர் நீண்டகாலமாக காதலித்து வந்ததாகவும் திருமணம் முடிக்க கேட்டபோது றியாஸ் மறுத்துள்ளதுடன் அன்று இரவு 9மணியளவில் பெண்ணின்வீட்டில் கதைத்துக்கொண்டு இருந்து விட்டு பின்னர் இரவு 2 மணியளவில் வீட்டினுள் புகுந்து அசிற் ஊற்றி பெண்ணை பற்ற வைத்துள்ளனர். பெண்ணின் தாய் நபரை நேரடியாக கண்டுள்ளார். பெண் உடனடியாக உயிர் இழந்துள்ளார். | மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்றது. |

www.tamilarangam.net

# சிறுமிகள் மீதான பாலியல் துஸ்பிரயோகங்கள்/ துன்புறுத்தல்கள் –2004

| தகவல் | சம்பவம் நடைபெற்ற முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வதிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| மட்டக் -களப்பு வைத்திய -சாலை | 09.02.2004 | 05 | பானம பொத்து -வில் | அயல் வீட்டு நபர் தயாரத்ன | பிள்ளை -யின் வீட்டுத் தோட்டத் -தில் | அயல் வீட்டு நபரால் சிறுமி பாலியல் துஸ்பிரயோகத்திற்குள் -ளாக்கப்பட்டுள்ளார். | சம்மந்தப்பட்ட சிறுமி மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதுடன் பொத்துவில் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| சூரியா | 11.02.2004 | 16 | மீரா ஓடை வாழைச் சேனை | அயல் வீட்டு நபர் | பொலநறுவை | அயல் வீட்டு நபரால் கடத்தப்பட்டு பொலநறுவையில் வைக்கப்பட்டிருந்தார். | தாய், தந்தை வாழைச்சேனை பொலிசில் முறைப்பாடு செய்துள்ளனர். வழக்கு தொடரப்பட்டுள்ளது. |
| மட்டக் -களப்பு வைத்தி யசாலை | 13.02.04 | 10 | வாழைச் சேனை | ஆசிரியர் | மாவடிச் சேனை பாடசாலை -யில் | மாவடிச்சேனை பாடசாலை ஆசிரியர் சிறுமியை அடித்து துன்புறுத்தியுள்ளார். இதனால் சிறுமியின் கழுத்தில் பாரிய காயமேற்பட்டுள்ளது. | வைத்திய சிகிச்சை பெறப்பட்டதுடன் வழக்கு பதிவு செய்யப்பட்டது. |
| மட்டக் -களப்பு வைத்தி யசாலை | 27.02.04 | 11 | இருதய புரம் மேற்கு | அயல் வீட்டு நபர் | காதலன் வீட்டில் புதூர் | சிறுமியை அழைத்துச் சென்று பாலியல் துஸ்பிரயோகம் செய்துள்ளார். | சிறுமியின் தாய், தந்தை பொலிசில் முறைப்பாடு செய்ததுடன் சிறுமி மட்டக்களப்பு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார். சம்பந்தபட்ட நபர் கைது செய்யப்பட்டுள்ளார். |
| மட்டக் -களப்பு வைத்தி யசாலை | 10.04.04 | 15 | இருதய புரம் மேற்கு | அந்த ஊர் நபர் | சம்மந்தப் பட்ட நபருக்கு தெரிந்த வீட்டில் (கல்லடி) | அயல் வீட்டு நபர் சிறுமியை அழைத்துச் சென்று பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியுள்ளார். | மட்டக்களப்பு பொலிசாரால் விசாரணை மேற்கொண்டு வருவதுடன், சிறுமி வைத்திய பரிசோதனைக்குட் படுத்தப்பட்டார். |

www.tamilarangam.net

# சிறுமிகள் மீதான பாலியல் துஸ்பிரயோகங்கள்/ துன்புறுத்தல்கள்–2004

| தகவல் | சம்பவம் நடைபெற்ற (முறைப்பாடு) திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| மட்டக்க -ளப்பு வைத்தி யசாலை | 10.05.04 | 14 | மட்டக்க - ளப்பு | தெரிந்த நபர் | அயல் வீடு | சிறுமிக்கு தெரிந்த நபரால் அயல்வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சிறுமி பாலியல் துஸ்பிரயோகத்துக்குள்ளாக் - கப்பட்டுள்ளார். | மட்டக்களப்பு பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன், மட்டக்களப்பு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார். |
| ஈழநாதம் | 17.05.2004 | 10 | மட்டக் -களப்பு | மறைக் கல்வி ஆசிரியர் | தாண் டவன் வெளி தேவால -யம் மட்டக் -களப்பு | மறைக்கல்வி கற்க சென்ற மாணவி மீது பாலியல் பலாத்காரம் | பொலிசில் முறைப்பாடு செய்யப்படவில்லை. |
| மட்/ வைத்தி யசாலை | 27.05.04 | 12 | கிரான் | அந்த ஊர் நபர் | விறகு வெட்டச் சென்ற இடத் -தில் | விறகு வெட்டச் சென்ற சிறுமி பாலியல் துஸ்பிரயோகத்திற் -குள்ளாக்கப்பட்டுள்ளார். | மட்/ வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனை இடம்பெற்றதுடன் பொலிஸ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. |
| ஈழநாதம் | 31.05.2004 | 12 | கோரக் -கல்லி மடு | 24 வயது மதிக்கத் -தக்க இளை -ஞன் | கோரக் -கல்லி மடுக் காடு | 24 வயது மதிக்கத்தக்க இளைஞனால்12 வயது சிறுமி விறகு வெட்டச் சென்றபோது காட்டுக்குள் வைத்து மிக மோசமான முறையில் பாலியல் துஸ்பிரயோகத்திற்குள் - ளாக்கப்பட்டுள்ளார். | சம்மந்தப்பட்ட சிறுமி மட் /வைத்தியசா லையில் சிகிச்சை பெறுவதுடன் குற்றம் சாட்டப்பட்டவர் மீது ஏறாவூர் பொலிசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். |
| மட்/ வைத்தி யசாலை | 06.06.04 | 07 | சம்மாந் -துறை | அந்த ஊர் நபர் | வீட்டில் | குறிப்பிட்ட நபரால் சிறுமி பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். | மட்/ வைத்தியசாலை யில் வைத்திய பரிசோதனை இடம்பெற்றதுடன் பொலிஸ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. |
| மட்/ வைத்தி யசாலை | 03.04.04 | 10 | அக்க ரைப்பற்று | மாமனார் | மாமன் வீட்டில் | மாமனாரால் அடித்து துன்புறுத்தப்பட்டுள்ளார். சிறுமியின் கண்ணில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. | மட்/ வைத்தியசாலை யில் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டார். வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிறுமிகள் மீதான பாலியல் துஸ்பிரயோகங்கள்/ துன்புறுத்தல்கள் – 2004

| தகவல் | சம்பவம் நடைபெற்ற/ முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| மட்/ வைத்தி யசாலை | 06.04.04 | 18 | மண்டூர் | இனந் தெரியாத ஆயுதக் குழுக்கள் | விசா ரணை செய்த இடத்தில் | சிறுமியை மிக மோசமாக அடித்து துன்புறுத்தியதால் சிறுமி மனநிலை பாதிக்கப்பட்டு வைத்திய சிகிச்சை பெற்று வருகின்றார். | சிகிச்சை இடம் பெற்று வருகின்றது. |
| மட்/ வைத்தி யசாலை | 11.05.04 | 12 | ஆரை யம்பதி | ஆசிரியர் | பாடசா லையில் | வகுப்பு ஆசிரியரால் அடித்து துன்புறுத்தப்பட்டு பலத்த காயங்களுக்குள்ளாக் -கப்பட்டுள்ளார் | மட்/ வைத்தியசாலை யில் சத்திர சிகிச்சைக்குட் - படுத்தப்பட்டார். காத்தன்குடி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது. |
| மட்/ வைத்தி யசாலை | 20.06.04 | 11 | காத்தான் குடி | சித்தப்பா | வீட்டில் | சித்தப்பா சிறுமியை அடித்து துன்புறுத்தியுள்ளார். சிறுமியின் முதுகில் மிக மோசமான காயம் ஏற்பட்டுள்ளது. | மட்/ வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனை இடம்பெற்றதுடன் பொலிஸ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. |
| மட்/ வைத்தி யசாலை | 27.06.04 | 10 | காத்தான் குடி | ஆசிரியர் | பாடசா லையில் | வகுப்பு ஆசிரியரால் அடித்து துன்புறுத்தப்பட்டுள்ளார். சிறுமியின் உடம்பு முழுவதும் காயம் ஏற்பட்டுள்ளது. | மட்/ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதுடன் காத்தான்குடி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது. |





நன்றி:- "யுனிசெப்"(ஓவியம்)

www.tamilarangam.net

# பெண்கள் தொடர்பான விசேட சட்டங்கள் 95ம் ஆண்டு சட்ட திருத்தங்கள்

## பாரபட்சம் காட்டப்படாதிருப்பதற்கான உரிமை



ஆண், பெண் இருவரும் சமமான உரிமைகளுக்கு உரித்துடையவர்கள். பால் காரணமாக பாரபட்சம் காட்டப்படாதிருப்பதற்கான உரிமை எமது அரசியலமைப்பினால் உத்தரவாதம் செய்யப்பட்ட அடிப்படை உரிமையாகும்.

அடிப்படை உரிமை மீறப்படுகின்றபோது அல்லது மீறப்படவுள்ளபோது ஒருமாதத்தினுள் உயர் நீதிமன்றுக்கு முறைப்பாடு செய்வதன் மூலம் நிவாரணம் பெற முடியும்.

## முறையற்ற வியாபாரம்

பணத்திற்காக அல்லது வேறு ஏதேனும் பிரதிபலனுக்காக ஒரு ஆளை விற்கின்ற அல்லது பண்டமாற்று செய்கின்ற நடவடிக்கையில் ஈடுபடும் எவரேனும் ஆள் முறையற்ற வியாபாரக் குற்றம் புரிந்தவர் ஆவார்.

முறையற்ற வியாபாரம் 2 வருடங்களுக்கு குறையாததும் 20 வருடங்களுக்கு மேற்படாதது மான சிறைத் தண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய குற்றம் ஆகும். பிரிவு 360 இ, குற்றவியல் கோவை.

## இருதார மணம்



எவராவது ஒருவரின் முன்னைய திருமணம் வலிதாகவுள்ளபோது, இரண்டாவது திருமணம் செய்து கொள்வது ஒரு குற்றமாகும்.

இருதார மணக் குற்றம் 7-10 வருடங்கள் மறியற்தண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும். பிரிவு 362ஆ, 362 இ, குற்றவியல் கோவை.

## பராயமடையாதவரின் பாலியல் வல்லுறவு

எவராவது ஆள் 16 வயதிற்குட்பட்ட பெண்ணுடன் அவளின் சம்மதமுடனோ, அன்றியோ பாலியல் உடலுறவில் ஈடுபட்டால் அவர் பாலியல் வல்லுறவுக் குற்றம் புரிந்தவராவார்.

தவறாளர் 20 வருடங்களுக்கு நீடிக்கப்படக் கூடியதும் ஆகக் குறைந்தது 10 வருட மறியற் தண்டனையாலும் தண்டத்தாலும் தண்டிக்கப்பட பொறுப்பாவார். அவர் பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடும் செலுத்த பொறுப்பாவார். பிரிவு 364 , குற்றவியல் கோவை

## சொற்கள் மூலமான பாலியல் தொல்லை




பாலியல் தொனியிலான சொற் பிரயோகத்தின் விளைவாக ஒரு பெண்ணுக்கு பாலியற் தொந்தரவு ஏற்படின் அது பாலியற் தொல்லையை உருவாக்கும்.

இக்குற்றம் 5 வருடங்களுக்கு மேற்படாத மறியற் தண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும். பிரிவு 345 குற்றவியல் கோவை.

## பாலியல் வல்லுறவு

எவராது ஆள், ஒரு பெண்ணின் சம்மதமின்றி, அல்லது வலுக் கட்டாயம், பயமுறுத்தல் அல்லது அச்சுறுத்தல் மூலமாக அல்லது அவளுக்கு கொலை அல்லது காயம் விளைவிப்பதற்கான அச்சத்தை ஏற்படுத்தி அல்லது அவள் சித்தசுவாதீனமற்ற நிலையிலுள்ளபோது அல்லது குடிபோதையில் உள்ளபோது அல்லது சட்டமுறையற்ற தடுத்து வைப்பிலுள்ள போது சம்மதம் பெற்று, பாலியல் உடலுறவு கொண்டால் அவர் பாலியல் வல்லுறவு குற்றம் புரிந்தவராவார்.

பாலியல் வல்லுறவுக் குற்றமானது 20 வருடங்கள் நீடிக்கப் படக்கூடியதும் ஆகக் குறைந்தது 7 வருடங்கள் கட்டாயமான மறியற் தண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய குற்றம். குற்றவாளி தண்டம் செலுத்துவதுடன் பாதிக்கப்பட்டவருக்கு நட்ட ஈடும் செலுத்த பொறுப்பாவார். பிரிவு 364 குற்றவியல் கோவை.

## பெண்களை தடுத்து வைத்தல்



ஒரு பெண் இன்னொரு பெண் அலுவலரின் பொறுப்பிலுள்ள கட்டுக்காவலில் வைத்திருக்கப் படல் வேண்டும்.

## வேலையிடத்தில் பாலியல் தொல்லை.



வேலையிடத்தில் அதிகாரத்திலுள்ள எவரேனும் ஆள் அங்கு வேலை செய்யும் பெண்ணின் சம்மதமின்றி அல்லது விருப்புக்கு மாறாக பாலியல் தொனியிலான சொற்களைப் பேசுதல் அல்லது ஏதாவது செய்கைகளைப் புரிதல் மூலமாக பாலியல் தொந்தரவு செய்யின் அவர் பாலியல் தொல்லைக் குற்றம் புரிந்தவராவார்.

இக்குற்றம் 5 வருடங்களுக்கு மேற்படாத மறியற் தண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய குற்றம் பிரிவு 345, குற்றவியல் கோவை.

www.tamilarangam.net

## பாலியல் துஸ்பிரயோகம் தொடர்பான வெளியீட்டு விடயம்



பாலியல் குற்றங்களினால் பாதிக்கப் பட்டவரின் சம்மதமின்றி அவரை அடையாளம் காணக் கூடியவராக பெயரை அல்லது ஏதேனும் விடயங்களை வெளியிடுதல் 2 வருடங்களுக்கு நீடிக்கப்படக்கூடிய சிறைத்தண்டனையால் அல்லது தண்டத்தால் அல்லது இரண்டாலும் தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும். பிரிவு 365 இ, குற்றவியல் கோவை.

## 18 வயதிற்குட்பட்ட ஆட்களின்திருமணம்



ஆண், பெண் இருவரும் திருமணம் செய்யக்கூடிய ஆகக் குறைந்த வயது 18 ஆகும்.

18 வயதிற்குட்பட்டவர்களால் அல்லது 18 வயதிற்குட் பட்டவர்களுடன் செய்யப்படும் திருமணம் சட்டப்படி வலிதற்றது. 18 வயதிற்குட்பட்ட ஒருவர் அல்லது இருவரினதும் திருமணம் பெற்றோர் சம்மதம் வழங்குவதனால் வலிதுடைமை பெறமாட்டாது.

ஒருவர் 16 வயதிற்குட்பட்ட பெண்ணை திருமணம் செய்து அவளுடன் பாலியல் உடலுறவு கொண்டால் அவர் பாலியல் வல்லுறவுக் குற்றத்திற்கு பொறுப்பாவார்.

## ஆட்கவர்தல் / ஆட்கடத்தல்

ஒரு பெண் தான் சட்டவிரோதமான பாலியல் உடலுறவிற்கு வற்புறுத்த அல்லது கட்டாயப்படுத்தக் கூடும் என்ற அறிவு அல்லது எண்ணத்துடன் அவளை ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல் 10 வருடங்களுக்கு நீடிக்கக் கூடிய சிறைத்தண்டனையாலும் தண்டத்தினாலும் தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும்.
- பிரிவு 367, குற்றவியல் கோவை.

## தகாத புணர்ச்சி

தகாத புணர்ச்சி என்பது நேரடி முற்சந்ததியினர் அல்லது பிற்சந்ததியினர், அல்லது இரத்தம் அல்லது திருமணம் அல்லது மகப்பேற்று மூலமான நெருங்கிய உறவினர்கள். (அதாவது தந்தையும் மகளும், சகோதரனும் சகோதரியும், பேரனும் பாட்டியும்) பாலியல் உடலுறவில் ஈடுபடுவதாகும்.

தகாத புணர்ச்சி ஆகக் குறைந்தது 7 வருட மறியற் தண்டனையால் தண்டிக்கப்படக்கூடியது. பிரிவு அ, குற்றவியல் கோவை.

16 வயதிற்குட்பட்ட பெண்ணுடனான தகாத புணர்ச்சி ஆகக் குறைந்தது 15 வருட மறியற் தண்டனையால் தண்டிக்கப்படக் கூடியதாகும். பிரிவு 364 (3), குற்றவியல் கோவை.

## கோஷ்டி பாலியல் வல்லுறவு



ஒரு பெண், ஆட்கள் கோஷ்டியினால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படும்போது அக்கோஷ்டியிலுள்ள ஒவ்வொருவரும் 20 வருடங்களுக்கு நீடிக்கப்படக் கூடியதும் ஆகக் குறைந்தது 10 வருட கட்டாய மறியற் தண்டனையாலும் தண்டத்தினாலும் தண்டிக்கப்பட பொறுப்பாவார். குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவர் பாதிக்கப் பட்டவருக்கு நட்டாடு செலுத்த பொறுப்பாவார். பிரிவு 364, குற்றவியல்

## பாரதுரமான பாலியல் துஷ்பிரயோகம்

ஒரு பெண்ணின் வாய்க்குள், குதத்தினுள் அல்லது அவளது உடலின் வேறு பாகத்தினுள், எவரேனும் ஆள் தனது ஆண் உறுப்புக்களை அல்லது வேறு ஏதேனும் உடற் பாகத்தை பயன்படுத்தி பாலியல் திருப்தியை அடையச் செய்யும் செயலில் ஈடுபட்டால் பாரதூமான பாலியல் துஸ்பிரயோகக் குற்றம் புரிந்தவராகின்றார்.

பாரதூரமான பாலியல் துஸ்பிரயோகம் பாலியல் வல்லுறவு குற்றத்திற்கான அதே தண்டனையால் தண்டிக் கப்பட பொறுப்பாகும். - பிரிவு 365 ஆ, குற்றவியல் கோவை.

## பொது இடங்களிலும் /பொதுப் போக்கு வரத்துகளிலும் பாலியல் தொல்லை.



எவராவது பெண்களுக்கு சொற்கள் அல்லது செயல்கள் மூலமாக பாலியல் தொல்லை அல்லது தொந்தரவு செய்தால் அவர் பாலியல் தொல்லைக் குற்றம் புரிந்தவராவார். பெண்ணின் சம்மதமின்றி அல்லது விருப்புக்கு மாறாக உடலைத் தொடுவது அல்லது பாலியல் தொனியிலான வார்த்தைகளை பிரயோகிப்பது பாலியல் தொல்லைக்கு சமமாகும்.

இக்குற்றமானது 5 வருடங்களுக்கு மேற்படாத மறியற் தண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய குற்றம் பிரிவு 345, குற்றவியல் கோவை.

## விவாகரத்து



பரஸ்பர சம்மதம் விவாகரத்திற்கான அடிப்படை அல்ல. விவாகரத்தானது சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைகள் நிருபிக்கப்பட்டால் மட்டுமே பெறப்பட முடியும். அவையாவன: திருமணத்தின் பின்பான சோரம், வேண்டுமென்று கைவிடல், திருமணத்தின் போதான மாற்ற முடியாத மலட்டுத் தன்மை.

*நன்றி :- பெண்களின் சட்ட உரிமைகள்*

www.tamilarangam.net

# விவாகரத்து வழக்குகள் தொடர்பாக மாவட்ட நீதிமன்றக் கட்டளைகள்.

1) ஓட்ட மாவடியைச் சேர்ந்த பெண்ணின் வழக்கு நிரந்தர விவாகரத்து வழங்கப்பட்டதுடன் நஸ்ட ஈடாக 200,000 ரூபா பணமும் தீர்ப்பு வழங்கப் பட்டது. எதிராளி வங்கி உத்தியோகஸ்தராக உள்ள மையால் நஸ்ட ஈடு கட்டத் தவறினால் சம்பளப் பணத்திலிருந்து அறவிடப்படும் எனவும் தீர்ப்பு வழங் கப்பட்டது. பிள்ளை பராமரிப்பு செலவு மாதம் 700 ரூபா காதி நீதிமன்றம் மூலம் பெறுகிறார்.

2) அக்கரைப்பற்றைச் சேர்ந்த பெண்ணின் வழக்கு எதிராளி நீதிமன்றுக்கு சமூகம் கொடுக்கத் தவறி யமையால் விவாகரத்து ஒரு பக்கத் தீர்வாக வழங்கப்பட்டதுடன், பிள்ளைகள் தாயின் பராமரிப் பில் இருக்க வேண்டும் எனவும், வழக்கு பதிந்த காலத்திலிருந்து பராமரிப்பு செலவும், 25,000/= சீதணப்பணமும் கட்ட வேண்டும் என நீதிமன்றத் தினால் உத்தரவிடப் பட்டது.

3) இருதயபுரத்தைச் சேர்ந்த பெண்ணின் வழக்கு தவணை இடம்பெற்று வருவதுடன் எதிராளி நீதிமன்றுக்கு சமூகம் கொடுக்காமல் இருப்பதனாலும் சம்மந்தப்பட்ட நபர் இருதார திருமணம் முடித்த காரணத்தாலும் குற்றப்புலணாய்வு பிரிவிற்கு முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

4) அக்கரைப்பற்று பனங்காட்டைச் சேர்ந்த வழக்கு கடந்த 4 வருடமாக விசாரணை இழுபறியான நிலை யில் இருந்ததுடன் குழந்தை தந்தையின் பராமரிப் பில் இருந்துள்ளது. தற்போது நிரந்தர விவாகரத்து வழங்கப்பட்டதுடன் குழந்தை தந்தையின் பராமரிப்பில் இருக்க வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

5) கருவேப்பங்கேணியைச் சேர்ந்த பெண்ணின் வழக்கு கணவர் புணரும் திறனற்றவர் எனவும், தினமும் கொடுமைப்படுத்தியதையும் காரணம் காட்டி வழக்கு பதிவு செய்யப்பட்டது. எதிராளி தனக்கு நஸ்ர ஈடு ஐந்து லட்சம் கோரி மனுத்தாக்கல் செய்துள்ளார்.

6) குமாரபுரத்தைச் சேர்ந்த பெண்ணின் வழக்கு 5000,00 ரூபா நஸ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த போதும் எதிராளி நீதிமன்றுக்கு சமூகம் கொடுக்கத் தவறியமையால் ஒரு பக்கத் தீர்வை வழங்கியதுடன் பராமரிப்பு செலவு மாதாந் தம் 1500/= செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. நீதிமன்று மூலம் அழைப்பு கட்டளை அனுப்பப் பட்டுள்ளது. எனினும் சம்மந்தப்பட்ட நபர் பெண்ணை பின் தொடர்ந்து தொந்தரவு செய்வதுடன் கொலை மிரட்டலும் செய்கின்றார். எனினும் இந்நபரை கைது செய்யவோ தண்டிக்கவோ பொலிசார் முன் வரவில்லை.

7) புதுக்குடியிருப்பை சேர்ந்த பெண்ணின் வழக்கு அவரது கணவன் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டும் தொடர்ந்து தவணைக்கு வராமலும் உள்ளார். சம்மந்தப்பட்ட பெண் தவணைக்கு தொடர்ந்து சமூகம் கொடுத்த போதிலும் கடைசித் தவணை சரியாக அறிவிக்காமையால் வழக்கு தள்ளுபடியாகியது.

ஏறாவூரைச் சேர்ந்த 35 வயது பெண் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட வழக்கு குற்றம் சாட்டப்பட்ட இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்ததுடன் 2000/= காசுப் பிணையும் 50,000 சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர் 13.07.2004 அன்று வழக்கு நீதி மன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## பெண்கள் சிறுவர்களின் உரிமைகளுக்காக வேலை செய்யும் நிறுவனங்கள் – மட்டக்களப்பு.

- சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
- மனித உரிமைகள் இல்லம்
- பெண்கள் சிறுவர்களிற்கான பொலிஸ் பிரிவு - மட்டக்களப்பு
- சிறுவர் நன்நடத்தை பிரிவு நீதிமன்றக் கட்டிடம் - மட்டக்களப்பு
- மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழு
- பெண்கள் சிறுவர்களிற்கான பொலிஸ் பிரிவு காத்தான்குடி
- உள மருத்துவ பிரிவு மட்/வைத்தியசாலை
- பெண்கள் சிறுவர்களிற்கான பொலிஸ் பிரிவு ஏறாவூர்
- யுனிசெவ்
- சிறுவர் பாதுகாப்பு நிறுவனம்
- சினேக தீபம்
- குடும்பநல ஆலோசனைப் பிரிவு மட்/நீதிமன்றம்
- சட்ட வைத்திய பிரிவு மட்/வைத்தியசாலை
- மகப்பேற்றியல் பிரிவு மட்/வைத்தியசாலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தாபரிப்பு வழக்குகள் தொடர்பாக நீதிவான் நீதிமன்றக் கட்டளைகள்.

- இருதயபுரத்தைச் சேர்ந்த பெண்ணை கணவன் அடித்து துன்புறுத்தி கைவிட்டுள்ளார். தாபரிப்பு பணமாக 17200/= நீதிமன்று மூலம் தீர்க்கப் பட்டதுடன் தொடர்ந்து மாதம் மாதம் தாபரிப்பு பணம் கட்டுமாறும் நீதிமன்று கட்டளையிட்டது. 01.03.2004.
- தாளங்குடாவைச் சேர்ந்த பெண்ணுக்கு தாபரிப்பு பணமாக 25000/= கட்டவேண்டும் என்று நீதிமன்று தீர்ப்பு வழங்கியுள்ளது. தொடர்ந்து மாதம் மாதம் தாபரிப்பு செலவு கட்ட வேண்டும் எனவும் உத்தர விடப்பட்டது. 16.02.2004.
- ஏறாவூரைச் சேர்ந்த பெண் தாபரிப்பு பணம் 17500/= நீதிமன்றுமூலம் கணவரிடம் பெற்றுக்கொண்டதுடன் தொடர்ந்து மாதம் மாதம் தாபரிப்பு பணம் பெற்று வருகின்றார். 27.04.2004.
- புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பெண் தாபரிப்பு பணமாக 27000/= நீதிமன்று மூலம் பெற்றுக் கொண்டதுடன் தொடர்ந்து மாதம் மாதம் தபாரிப்பு பணம் பெறுகின்றார். 27.02.2004.
- சின்ன ஊறணியைச் சேர்ந்த பெண் தாபரிப்பு பணம் நீதிமன்று மூலம் 27200/= பெற்றுக் கொண்டார். தொடர்ந்து மாதம் மாதம் 1000/= தாபரிப்பு பணம் பெறுகின்றார்.
- இருதயபுரத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு நீதிமன்று மூலம் தாபரிப்பு பணம் மாதம் 5000/= தீர்ந்துள்ளது.
- ஏறாவூரை சேர்ந்த பெண்ணின் தாபரிப்பு வழக்கு எதிராளி நீதிமன்றுக்கு சமூகம் அளிக்காமையால் 10 மாத சிறைத் தண்டனையும் 30,000 காசுப் பிணையும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## கொலை வழக்குகள் தொடர்பாக தற்போது உள்ள நிலை.

1. **மாவடி வேம்பைச் சேர்ந்த 16 வயது சிறுமி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கு** - சம்மந்தப்பட்ட குற்றவாளி 18 மாதம் விளக்க மறியலில் இருந்ததுடன் 10000/= பிணையில் விடுவிக்கப் பட்டார். தற்போது சம்மந்தப்பட்ட நபர் சாட்சியமான சிறுமியின் பேத்தியாரை கொலை மிரட்டல் செய்தமை காரணமாக மீண்டும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றுக்கு கொண்டு வரப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.
2. கல்முனையைச் சேர்ந்த பெண் 8 மாத கற்பிணியான நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற போது மருத்துவர்களின் கவலையீனம் காரணமாக குழந்தை குறை மாதத்தில் பிறந்து குழந்தையும், தாயும் மருத்துவ மனையில் இறந்தமை தொடர்பான வழக்கு சட்டமா காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டதுடன் மரணச் சான்றிதழ் சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.
3. **புன்னைச்சோலையை சேர்ந்த பெண்ணின் 40 நாள் குழந்தையை கொலை செய்தமை சம்மந்தமான வழக்கு** சம்மந்தப்பட்ட நபர் கைது செய்யப்பட்டு இரண்டு மாதமும் 17 நாட்களும் விளக்க மறியலில் வைக்கப்பட்டு 10000/= பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் 23-09-2003 அன்று வழக்கு சட்டமாகாரியாலயத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது.

## பாலியல் வல்லுறவு கொலை



கழுத்து வெட்டி கொலை செய்யப்பட்டு மரத்தில் தூக்கப்பட்ட பெண்ணின் சடலம்.

ஏறாவூரைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயான 36 வயது பெண்ணைக் கடந்த 99 ஆண்டு தை மாதம் 20ம் திகதி காலை 2 மணியளவில் நான்கு நபர்கள் வீட்டுக்குள் புகுந்து இப் பெண்ணை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கியதுடன் கழுத்தை வெட்டி மரம் ஒன்றில் தூக்கிலிட்டுள்ளனர். குற்றம் சாட்டப் பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். தற்போது மேல் நீதிமன்றில், வழக்கு விசாரணை இடம் பெற்று வருகின்றது. இதுபோன்று ஏறாவூரில் 4 பெண்கள் இனந் தெரியாத குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக் குள்ளாக் கப்பட்டு கொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net

## எட்டமுடியாத சட்டங்கள்

பெண்கள் மீதான வீட்டு வன்முறைகள் அதிகரித்து வருவதுடன் இது சம்மந்தமாக பொலிசில் முறைப்பாடு செய்யப்படுகின்றபோது அவர்களது பிரச்சினைகள் சார்ந்து குற்றம் விளைவித்தவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்க தவறுகின்றனர். கணவன் மனைவியை அடித்து துன்புறுத்துவதுடன் கொலை மிரட்டலுக்கும் உள்ளாக்கப்படுகின்றபோது பொலிசார் இதனை குடும்ப பிரச்சினையாக கருதுவதுடன் இது சார்ந்து குற்றம் விளைவித்தவரை தண்டிக்கவோ, கைது செய்யவோ தமக்கு உரிமை இல்லையென்று கூறுகின்றனர். ஒரு நபர் ஆயுதம் பாவித்தால், கொண்டு சென்றால் குற்றவியல் சட்டத்தை மீறுகின்ற செயலாக கருதுகின்ற போது மனைவியை, பிள்ளைகளை, காதலியை தாக்குகின்றபோது அது ஏன் குற்றமாக படவில்லை என்பது புரியவில்லை. சம்மந்தப்பட்ட பெண்கள், பிள்ளைகள் பாதுகாப்பின்றி, விடுதிகளை நாடுவதும், அயல்வீடுகளிலும், வேறு கிராமங்களிலும் பாதுகாப்பிற்காக செல்லுகின்றனர். பிள்ளைகளின் பாடசாலை படிப்பு இடை நிறுத்தப்படுவதுடன் பெண்ணுக்கு சீதனமாக கொடுத்த வீட்டில் பெண்கள் தங்கி வாழமுடியாமல் உள்ளனர். குற்றம் விளைவித்த கணவன் வீட்டில் இருப்பதுடன், தொடர்ந்தும் கொலை மிரட்டல் செய்வதும் குற்றச் செயல்களில் ஈடுபட்டும் வருகின்றனர். இது சம்மந்தமாக வழக்கு தொடருகின்ற போதும் சம்மந்தப்பட்ட நபர் நீதிமன்றுக்கு சமூகம் தராமல் உள்ளனர். நீதிமன்றம் மூலம் பிடியாணை பிறப்பிக்கப்படுகின்ற போதும் சம்மந்தப்பட்ட நபரை கைது செய்யாமல் உள்ளனர். சம்மந்தப்பட்ட பெண்கள் நீதிக்காக காத்திருக்கின்ற காலத்திற்கு அளவே இல்லை. உதாரணமாக கல்லடியைச் சேர்ந்த பெண் 4 பிள்ளைகள் உள்ளனர்.கணவன் பல தடவைகள் அடித்து துன்புறுத்தி, கத்தியால் வெட்டியும் மட்/வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதுடன் தற்போது கணவன் கத்தியுடன் திரிவதால் இப்பெண் விடுதியில் தற்காலிகமாக தங்கி வாழ்கின்றார். இது சம்மந்தமாக காத்தான்குடி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது. எனிலும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் உள்ளனர். இதனால் பிள்ளைகளின், பெண்களின் பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய கவிதை.

## உலகை மன்னியும்

நீ மலர்ந்து கிழித்த பொழுதில்
உன் மென்சிறு உலகினது –
உன் குறுகுறு விழிகளுளாத்த
வண்ணத்துப் பூச்சிகளும்,

உன் துடிதுடிப்பொத்த
கன்றுகளும்

உன் கனவுகள் ஒத்த
பட்டங்களும்

உன் ஆசைகள் ஒத்த
நத்தைகளும்

உன் அன்பை ஒத்த
மென்சிறகும்

உன் கருணை ஒத்த
காகங்களும்

உன் நம்பிக்கை ஒத்த
அம்மாவையும்
போலல்லவென அறிந்திருக்க மாட்டாய்.
மனிதர்களைப்பற்றி!

உன் 'தந்தையின் குறிகளிடை'
'உன் வாழ்க்கை' அகப்பட்ட போது: நீ
அறிந்திருக்கமாட்டாய்
மனிதர்களைப்பற்றி!

ஆக்கம்
செல்வி - T. உருத்திரா.
22.09.2004.

www.tamilarangam.net

**பெண்கள் அமைப்புக்களால் வெளியிடப்பட்ட பெண்கள், சிறுவர் உரிமைகள் சம்மந்தமாக வெளிவந்த செய்தி மடல்கள், சஞ்சிகைகள் சூரியா நூலகத்தில் உள்ளவை சில பின்வருமாறு பட்டியல் படுத்தப்பட்டுள்ளது.**

- "பெண்ணுரிமை கண்காணிப்பு ஆண்டறிக்கை - 1999" பெண்கள் தொடர்பு ஊடகக் கூட்டமைப்பு கொழும்பு.
- "பெண்ணுரிமைகள் கண்காணிப்பு" பெண்கள் தொடர்பு ஊடகக் கூட்டமைப்பு கொழும்பு
- "உங்கள் உரிமைகள் யாவை தேவை நாடும்" மகளிர் வெளியீடு - கொழும்பு.
- "பெண்கள் உரிமைகள்" (CHA) - கொழும்பு
- "சிறுவர் பாலியல் கொடுமைகள்" இலங்கை மானா மக்கீன்
- "சிறுவர் மீதான பாலியல் வன்முறைகள்" கமலா பாசின் - இந்தியா
- "பெண்களுக்கான சட்டவியல் விளக்கம்" பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் கொழும்பு.
- "பெண்களின் பட்டயம்" இலங்கை பெண்கள் பற்றிய தேசிய குழு மகளிர் விவகார அமைச்சு - கொழும்பு.
- "சட்டமும் பெண்களின் பாலியல் உரிமைகளும்" பிளேமியா அக்னஸ் - தமிழ்நாடு.
- "பெண்கள் உரிமைகளும், மனித உரிமைகளே" விஞ்ஞானிகள் சங்கம் - கொழும்பு
- "பெண்கள் உரிமைகளை மனித உரிமைகளாக அங்கீகரித்தல் ஓர் மீள் பார்வை" சமூக விஞ்ஞானிகள் சங்கம் - கொழும்பு
- "பெண்கள் , சமயம், குடும்பம், சட்டம்" தென் ஆசிய பெண்களுக்கான, சட்டமும், அபிவிருத்திக் குமான கூட்டமைப்பு.
- "விவாகரத்து" - முஸ்லிம் பெண்கள் ஆய்வுக்கான நிறுவனம் - கொழும்பு
- "யாழ்ப்பாணத்து தமிழரும் பாரம்பரிய சட்டமும்" பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் கொழும்பு.
- "முஸ்லிம் குடும்ப சட்டம்" முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயற்பாடு நிறுவனம் - கொழும்பு
- "திருமணம்" - முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயற்பாடு நிறுவனம் - கொழும்பு.
- "அடிப்படை - உரிமைகள்" பெண்களுக்கான ஆய்வு நிறுவனம்
- "இலங்கையில் பெண்கள்" (CENWOR) - கொழும்பு
- "பெண்கள் பட்டயம்" - மகளீர் அபிவிருத்தி நிலையம் - யாழ்ப்பாணம்
- "சீடோ விளங்கிக்கொள்ளல்" பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
- "பெண்கள் மதவெறி வன்முறை" (PUSL) - தமிழ் நாடு
- "பெண்கள் அரசியல் விழிப்புணர்வையும் ஈடுபாட்டையும் அதிகரித்தல்" - பேராதனைப் பல்கலைக்கழகம்.
- "பெண்களின் கொள்கை விளக்க அறிக்கை" இலங்கைப் பெண்களின் கூட்டமைப்பு 2001
- சட்டம், மனித உரிமைகள் மற்றும், எயிட்ஸ் மாற்றுக் கொள்கைக்கான நிலையம் கொழும்பு.

www.tamilarangam.net

# பாலியல் குற்றச் செயல்கள் தொடர்பான நடைமுறை பயிற்சிப்பட்டறை

சாட்சிய, சட்ட மருத்துவ விடய நிகழ்ச்சி கொழும்பு சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அறநெறி நிறுவனத்தினால் (Law and Society Trust) மட்டக்களப்பு மன்றேசா தியான இல்லத்தில் 25, 26 செப்டம்பர் 2004 இல் இடம்பெற்றது. இதில் பங்கு பற்றுனர்கள் பொலிசார் உட்பட சட்டவைத்திய அதிகாரி மற்றும் DMO, மனநல வைத்தியர்கள், சட்டத் தரணிகள், பெண்கள் நிறுவனங்கள் உட்பட 50 பேர் வரை கலந்து கொண்டனர்.

### இதில் கருத்துரை வழங்கியவர்களும்/ தலைப்புக்களும்

1. பாலியல் குற்றச் செயல்கள் சம்மந்தமான பொலிஸ் நடைமுறை விடயங்கள்,
   **திரு. சந்திரா பர்னானடே.**
   பிரதிப் பொலிஸ்மா அதிபர்.
2. பாலியல் குற்றச் செயல்கள் சம்மந்தமாக சட்ட நடைமுறை விடயங்கள்
   **திரு. சூசைதாசன்**
   அரச சட்டத்தரணி
3. பாலியல் குற்றச் செயல்கள் சம்மந்தமான சட்ட மருத்துவ விடயங்கள்.
   **டாக்டர். பிரியான்ஜித் பெரேரா**
   தலைவர், சட்ட மருத்துவ பீடம்,
   கணணிய பல்கலைக்கழகப் பிரிவு.

திரு. சந்திரா பர்ணான்டோ உரையாற்றுகையில்.
**பொலிஸ் செயற்பாடு மறுசீரமைப்பு 4 கடமைகள்**
1. சமுதாய விழுமியங்கள்
2. சட்டத்திற்கு பொறுப்பு கூற வேண்டும்
3. மனித உரிமைகள் பேணி பாதுகாத்தல்
4. பொது மக்களின் நம்பிக்கையை ஏற்படுத்தல்.

குற்றச் சாட்டுக்கள்:
- இனரீதியான
- சிறுபான்மையினர்
- துன்புறுத்தல்
- இசைந்து கொடுக்காத தன்மை
- அதிகமான அதிகாரத்தை பிரயோகித்தல்.
- பிற்போக்கு வாதம்
- துவேசமாக நடப்பது.
- துவேசமாக இருப்பது

அதிகமான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் அனுராதபுரம், பொலனறுவை பகுதிகளில் இடம்பெற்றுள்ளது. 2001, 2002, 2003 காலப்பகுதிகளில் நடந்தவை தரவுகள் மூலம் காணலாம்.

| | 2001 | 2002 | 2003 |
|---|---|---|---|
| சகோதரன் | 01 | - | 01 |
| தந்தை | 04 | 02 | 02 |
| மைத்துனர் | 02 | 04 | 03 |
| இரத்த உறவு | 13 | 13 | 09 |
| அயல் வீட்டார் | 58 | 40 | 30 |
| காதலன் | 23 | 32 | 19 |

மார்ச், ஏப்பிரல், நவம்பர், டிசம்பர் அறுவடை காலங்களில் வீட்டில் ஆட்கள் இல்லாது தொழிலுக்கு செல்லும் நேரங்களில் இச்சம்பவங்கள் இடம்பெற வாய்ப்புக்கள் இருந்ததாகவும் ஆய்வுகள் மூலம் தெரிய வருகின்றது. சட்டத்தின்படி நிருபிப்பதற்கு முறைப்பாட்டாளர்கள் வாக்குமூலம் அவசியமாகின்றது. இதிலிருந்து குற்றம் விளைவித்தவரை இனங்காண முடியும்.

இவ்வாறான விடயங்களை கையாள பொலிசாருக்கு விசேச திறமை தேவைப்படுகின்றது.

பொலிஸ் புலனாய்வு என்றால் என்ன? மேலதிக சாட்சியங்களை ஆராய்தல்.

பொலிசாருக்கு சிறந்த அறிவு சிந்தனைத் திறன் அவதானிப்பு, ஒழுங்கமைப்பு செய்யும் ஆற்றல் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் தேவைப்படுகின்றது. ஆர்வம் இருக்க வேண்டும் 3 மொழிகள் தெரிந்திருக்க வேண்டும். இது பற்றிய விசேட பயிற்சிகள் பொலிஸ்மா அதிபர் ஒழுங்கு செய்ய இருப்பதாக கூறப்பட்டது. மற்றும் இப்பிரதேசங்களில் தமிழ் பேசும் பெண்கள் பொலிஸ் வேலைக்கு விண்ணப்பிக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.

### பாலியல் குற்றச் செயல்கள் சம்மந்தமான சட்ட நடைமுறைகள்.

95ம் ஆண்டு சட்ட திருத்த புதிய சட்ட முறைமை பெண்கள் மீதான பாலியல் குற்றச் செயல்கள், சிறுமிகள் மீதான பாலியல் குற்றச் செயல்கள் தொடர்பாக 11 புதிய குற்றங்கள் சிறுவர் தொடர்பாக கொண்டு வரப்பட்டுள்ளது. 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளிற்கான சட்டங்கள் தண்டனை கூடவாக உள்ளது. பொலிசார் நடைமுறையில் பழைய சட்டத்தின் கீழ் முறைப்பாட்டை பதிகின்றமையால் தண்டனைச் சட்டம் குறைவாக வழங்க வேண்டியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- ஒருபெண்ணைப் பார்த்து அழகை விமர்சிப்பது குறைந்த தண்டனை 5 வருடம்.
- ஒரு பெண்ணை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினால் 20 வருட சிறைத் தண்டனை. குற்றங்களை நிரூபிக்க பொலிசார் எழுதுகின்ற வாக்கு மூலம் சரியானதாய் இருத்தல் அவசியமாகிறது.

சட்ட மருத்துவம் என்றால் என்ன?

சட்ட வைத்திய நிபுணத்துவம் பெற்றுள்ள ஒரு வைத்தியரால் மட்டும் சட்ட வைத்திய பரிசோதனை செய்ய முடியும்.


மருத்துவ பரிசோதனை சம்மந்தப்பட்ட நபரின் விருப்பத்துடன் செய்ய முடியும். நீதிமன்றக் கட்டளையுடன் செய்ய முடியும். நோயின் வரலாறு விசாரிக்கப்படும் காயங்கள், தடயங்கள் சான்றுகள் உடைகளிலிருந்தும், உடம்பின் வெளிப் பகுதியிலிருந்தும், உடம்பின் உட்பதிகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளக் கூடிய ஸ்பரிசங்கள் மற்றும் நுண்ணிய சான்றுதல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண்ணொருவரை கவனிக்கப்படவேண்டிய விதம் முதலில் அவள் தவறுக்குட்பட்ட ஒருவரே தவிர ஒரு தவறாளியெனக் கருதப்படலாகாது. அவளது தேவைகளுக்கெனப் புறம்பாக பெண் பொலிஸ் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும்.

**ஸ்பரிச சாட்சியங்கள் அழிந்து விடுவது எப்படி?**

- குற்றம் நடந்த இடத்தினை சரியான முறையில் பாதுகாக்காமை.
- பலியானவரதும் குற்றவாளியினதும் ஆடைகள் தொடர்பாக கவலையீனம்.
- அந்த ஆடைகளை சரியாகக் காயவைத்து பொதியிடாமை.
- பலியானவரும் குற்றவாளியும் தமது உடம்புகளை பாலியல் உறுப்புக்களை சுத்தம் செய்ததன் மூலம்.
- பல் துலக்குதல் சாப்பிடுதல் மலம் கழித்தல் மூலம்.
- மருத்துவப் பரிசோதனைக்கு தாமதமாக உட்படுத்துவதன் மூலம். ஆதலால் குற்றமொன்று நடைபெற்றிருந்தாலும் அது தொடர்பாக பௌதீக சாட்சியங்கள் இல்லாதவிடத்து மருத்துவர்களிற்கு தீர்மானமான சாட்சியமொன்று கூறுவதற்கு அவகாசம் இல்லை.





நன்றி :- உயிர்நிழல், விழக்கு (ஓவியம்)

www.tamilarangam.net

## பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்பதற்கான

# செயல்வாதம்

## 25 நவம்பர் – 10 டிசம்பர்






சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினராகிய நாம் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நீக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை 1996 ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகின்றோம். இது தொடர்பாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பாதிக்கப் பட்டவர்களுக்கு ஆதரவு வழங்கல், உளவள ஆலோசனைகளுக்கு வழிகாட்டல், வன்முறை களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுத்தல் முதலியவை எமது செயற்பாடுகளாகும். இவ்வேலை களின்போது நாம் பல பிரச்சினைகளையும், தடங்கல்களையும் எதிர் கொள்கிறோம். இவற்றை பகிர்ந்து கொள்வதன் மூலம் மேலும் இது பற்றிய சமூக ஒத்துழைப்பையும், ஆதரவையும் பெறலாம் என்று கருதுகிறோம். இந்த அடிப்படையில் பெண்களின் துயர்களை எடுத்துச் சொல்வதற்காய் நாம் சம்பவம் நிகழ்ந்த நேரம் அவர்கள் அணிந்திருந்த உடைகளில் அவ்வப் பெண்களது அடையாளங்கள். அவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைகளை எழுதி 19.12.2004 அன்று தொங்கவிட்டோம்.

வன்முறையின் சாட்சிகளாய் உடைகள் கொடியில் தொங்கவிடப்பட்டுள்ளன. தோய்ந்த, தூய்மையாக்கப்பட்ட உடைகளைத்தான் கொடியில் உலர்வதற்காக தொங்க விடுவார்கள். ஆனால் இங்கு கசக்கப்பட்ட, கறைபடுத்தப்பட்ட, கிழிக்கப்பட்ட உடைகளை அத்துன்பத்தின் சாட்சியாக தொங்க விட்டுள்ளோம். ஒவ்வொரு உடைகளும் கண்ணீரால், இரத்தத்தினால் தோய்ந்தவை. இவ்வாறு மனிதரின் அடிப்படைத் தேவையான உடை அவர்களது உரிமைகள் பறிக்கப்பட்டதற்கும், அவர்கள் துன்பப் பட்டதற்கும், சாட்சிகளாவது இனிமேலும் நிகழ வேண்டாம் என்பதற்காய் வன்முறைகளின் சாட்சிகளாக உடைகள் கொடிகளில் தொங்கவிடப்பட்டுள்ளன.





சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
இல.20, டயஸ்லேன்,
மட்டக்களப்பு.
தொ.பேசி - 065-2223297

முகவரி. ...................................
...................................
...................................
...................................